# சங்க இலக்கியங்களில் புறாவின் உணர்வுகள்

*அ. மோகனா*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்

**முனைவர் ரா. தேவணன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783587

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்கப்புலவர்கள் மக்களின் வாழ்வியலைக் கூறும் பொழுது தாங்கள் அறிந்த அஃறிணை உயிரினங்களையும் அவற்றின் உணர்வுகளையும் கூறியுள்ளனர். மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்த அவர்களுக்கு பறவைகளின் உணர்வுகளும் துணை நின்றன. அப்பறவைகளள்ளில் புறா தன் இணையைப் பிரியாது வாழும் பறவையாகும். இச்சிறப்பு வாய்ந்த புறாவின் உணர்வுகளை இக்கட்டுரை விளக்குகிறது.*

## முன்னுரை

சங்ககால மக்கள் இயற்கையை கடவுளாக மதித்துப் போற்றினார்கள். இயற்கையாக உள்ள நீர், நிலம், தீ போன்றவற்றை வணங்கினர். தங்களின் வாழ்வில் எடுக்க வேண்டிய முக்கியமான முடிவுகளுக்கு இயற்கையிடம் நிமித்தம் பார்த்தனர். அவர்கள் நிமித்தம் பார்க்கவும் இயற்கையையே எடுத்துக் கொண்டனர். அவற்றிலும் அஃறிணை உயிரினங்களைக் கொண்டே அவர்கள் நிமித்தம் பார்த்தனர். இவ்வாறு அனைத்து இடங்களிலும் சங்ககால மக்கள் அஃறிணை உயிரினங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அவற்றை பாதுகாக்க அவற்றின் உணர்வுகளை அறிதல் மிகவும் அவசியமாகும். அக்காலப் புலவர்களும் மக்களின் வாழ்வியலை பாடும்பொழுது பறவைகள், விலங்குகளின் உணர்வுகளைப் பாடத் தவறவில்லை.

அவ்வகையில் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பறவைகளின் உணர்வுகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## புறாக்களின் காதல் உணர்வு

புறாக்கள் இணைப்பிரியாக் காதல் பறவையாகத் திகழ்கின்றன. தன்காதல் துணையைப் பிரியாது சேர்ந்து புறாக்கள் வாழ்கின்றன.[1] என்பதை நற்றிணை அடிகள் கூறுகின்றன. மேலும் கள்ளியின் கிளையில் தனியே அமர்ந்திருக்கும் புறா தான் விரும்பிய பெடையை புணச்சிக்குக் குறிப்பால் அழைக்கும்[2] அகநானூற்றில் புறாக்கள் இணையாகச் செல்லும் போது அதை காணும் தலைவி தலைவனை பிரிந்த துயரத்தை எண்ணி வருந்துவதாகக் கூறப்பட்டுள்ளது. இதன்வழி புறாக்களின் காதல் தலைவன் தலைவியின் காதலை மிகைப்படுத்தி அவர்களுக்கு துயரத்தை கொடுக்கின்றது.

**கடவுள் பொதிய கருந்தாட் கந்தத்து**
**உடன்உறை பழைமையின் துறத்தால் செல்லாது**
**இரும்புறாப் பெடையொடு பயிரும்**

**- (அகநா.307:12-14)**

என்ற அடிகளில் புறாக்கள் கூடி வாழும் காலத்தில் தலைவியை பிரிய நினைப்பது தவறு என்பதைத் தோழி தலைவனுக்கு உணர்த்துகின்றாள்.

*பொறிவரிப் புறவின் செங்கால் சேவல்*
*சிறுபுன் பெடையொடு சேட்புலம் போகி*
*அரிமணல் இயவிர் பரல்தேர்ந் துண்டு*
*வரிமரல் வாடிய வான்நீங்கு நனந்தலைக்*
*குறும்பொறை மங்கிற் கோட்சுரம் நீந்தி*
*நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்*
*செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்*
*பல்காய் அஞ்சினை யகவும் அத்தம்*
*சென்றுநீர் அவண் ராகி நின்று தரும்*
*நிலையரும் பெருட்பிணி நினைத்தணி ரெனினே*
*- (அகநா. 271:1-10)*

என்ற அகநானூற்று பாடலில் தலைவன் பிரிந்து செல்லும் வழியில் ஆண்புறா தன் பெடையுடன் நெடுந்தொலைவு சென்று மணல்பகுதியில்கூழாங்கற்களைப்பொறுக்கி உண்டு நெல்லிமரக்கிளையில் அமர்ந்து கூவும் காதல் நிகழ்வு வெளிப்படுகின்றது. இணை பிரியா காதலுக்கு எடுத்துக்காட்டாக லவ்பேர்ட்ஸ் விளங்குகின்றது. எந்த நேரத்திலும் ஒன்றாகவே இருக்கும் இணைகளில் புறா போன்று சிறப்புறுவது இவைதான்[3] புறாக்கள் எப்பொழுதும் இணைப்பிரியாமல் இணைந்தே வாழ்கின்ற பறவை என்பதால்தான் இன்றும் வீடுகளில் விருப்பப்பறவையாக வளர்கின்றன.

## புறாக்களின் இன்பவுணர்வு

இன்பவுணர்வு அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. அவற்றின் கலவி செயல்பாடுகளின் தன்மையை அறிந்திருந்தால் மட்டுமே அவற்றின் இன்பவுணர்வை வெளிப்படுத்திக் கூற இயலும். பறவைகளில் அதிகமான இடம் பெயர்வாற்றலினாலும் (Mobillty), ஆண் பறவை, பெண் பறவையை இறுக்கப்பிடிக்க முடியாததாலும் காட்சியளிப்பும் (display) காதலூடாட்டமும் (Courtship) மிகவும் இன்றியமையாதாயிருக்கின்றன. பெண் பறவையைக் கலவி புரிதல் பொருட்டு முழு இணக்கத்துக் கொண்டுவர இவைகள் துணைபுரிகின்றன. இந்தப் பாலினத் தூண்டுதல் (Sexual stimulation) மட்டுமல்லாது சமந்தப்பட்ட பறவைகளைக் கூடு கட்டுவதிலும் (Nest Building) அடைகாப்பதிலும் (Insulation) முட்டைகளையும், குஞ்சுகளையும் கண்காணிப்பதிலும் ஈடுபடுத்துவதற்குத் தேவையான உணர்ச்சி கொண்ட நிலையை (State of excitability) இவை உருவாக்கித் தருகின்றன. இந்தத் தூண்டுதல் போதுமான அளவு இல்லாவிட்டால் இனவிருத்திச் செயல் முறைகள் (Process) பாதியிலேயே நின்று போய்விடும். இது புறாக்களில் மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றது.[4] என்கிறார் ஆல்ஃபிரட் மோகன்தாஸ். இவ்வாறான பறவைகளின் நடத்தைகளை உணர்ந்தே புலவர்கள் தங்களின் பாடல்களில் கூறியுள்ளார். வீட்டின் முற்றத்தில் மேயும் புறாக்கள் மாலை நேரத்தில் சேவலும் பெடையும் அன்பால் இணைந்திருக்கும் இனிமையான மாலை நேரத்தை,

*மனையுறை புறவின் செங்காற் பேடைக்*
*காமர் துணையொடு சேவல் சேரப்*
*புலம்பின் நம்ம புன்கண் மாலை*
*தனியே இருத்தல் ஆற்றேன் என்றுநின்*
*- (நற்:162;1-4)*

என்ற அடிகள் கூறும். மேலும்,

*குறுநடைப் புறவின் செங்காற் சேவல்*
*நெடிநிலை வியனகர் வீழ்துணைப் பயிரும்*
*புலம்பொடு வந்த புன்கண் மாலை*
*- (அகநா.47;17-13)*

என்னும் அடிகளில் மாலைப்பொழுதில் வீட்டில் வளரும் ஆண்புறா பெண்புறாவை இன்பவேட்கைக்காக அழைக்கும் காட்சி யைக் காண இயலும். புறாவின் பெட்டை அழகில்லாத வெள்ளச் சிறகினை உடையது. அது தன்னுடய சேவலை மகிழ்விப்பதற்காக மன்னருக்கு பக்கத்தில் வாத்தியங்களை முழங்கும் வாத்தியக்காரர்களைப் போல் இசையை எழுப்பும்தன்மை கொண்டது.[5] இதே கருத்தினை ஆண்பறவை கழுத்து முடியைச் சிலுப்பிக் கொண்டு சோடிப் புறாவிடம் குனிந்து நிமிர்ந்து அதன் முன் சுற்றும்போது கூவும்[6] என்று பறவை நூலார் ஸலீம் அலி கூறுகிறார். பறவைகள் இன்பத்தைத் துய்க்க எதிர்பாலினத்தை இனங்க வைக்க தன் திறமைகளை வெளிப்படுத்துகின்றது.

**புறாவின் அச்சவுணர்வு**

புறாக்கள் முன்பு நடந்த இன்னல்களை மனதில் வைத்துக் கொண்டு அது போன்ற செயல்களை எண்ணி அச்சமுறுகின்றன. புறாக்கள் சிலந்தி வலைகளைக் கண்டே அஞ்சும்[7] வேட்டுவனின் வலையில் சிக்கித் தப்பிய புறா சிலந்தியின் வலையைக் கண்டு அச்சமுறுகின்றது. இதனை,

**கொலைவல் வேட்டுவன் வலைபரிந்து போதிய**
**கானப் புறவின் சேவல் வாய்நூற்**
**சிலம்பி அஞ்சினை வெரூடம்** - (நற்.189:7-9)

என்ற அடிகள் குறிப்பிடும். மேலும்,

**கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்**
**தன்னகம் புக்க குறுநடைப் புறவின்**
**தபுதி யஞ்சிச் சீரை புக்க**
**வரையா வீகை யுரவேன் மருக**

- (புறநா.43:5-8)

என்ற அடிகளில் சிபிமன்னனின் பெருமையைக் கூறும்போது பருந்துக்கு அஞ்சிய புறாவைக் காக்க துலாக்கோல் ஏறியவன் என்று கூறுவதில் பருந்துக்குப் புறா அஞ்சுவதை காண முடிகிறது.

**புறாவின் துன்பவுணர்வு**

பறவைகள் கால மாற்றத்திற்கு ஏற்றவாறு உணவு தேடும் இடங்களை மாற்றும் தன்மை உடையன. அவ்வாறு உணவு தேடும் இடங்களை அறிவதற்கும் அவ்விடத்திற்குச் செல்வதற்கும் துன்பப்படுகின்றன. மணற்பாங்கான இடத்தில் கிடைக்கும் கூழாங்கற்களை உண்ணும் வெப்பம்மிகுந்த மழை இல்லாதஅச்சம்நிறைந்த காட்டுப்பகுதியில் இணையாக வாழும் ஆண்புறா தன் பெடையுடன் உணவுக் கிடைக்காமல் நெடுந்தொலைவு பறந்து சென்றமையை,

**பொறிவரிப் பறவின் செங்கால் சேவல்**
**சிறுபுன் பெடையொடு சேட்புலம் போகி**
**அரிமணல் இயவிற் பரல்தேர்ந் துண்டு**
**வரிமரல் வாடிய வான்நீங்கு நனந்தலைக்**
**குறும் பொறை மருங்கிற் கேட்புறம் நீங்கி**
**நெடுஞ்சுண் வந்த நீர்நசை வம்பலர்**
**செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்**
**பல்காய் அஞ்சினை யகவும் அத்தம்**

- (அகநா.271:1-8)

என்ற அடிகள் சுட்டும்.

புறாக்கள் உணவுக்காக நெடுந்தொலைவு அழைந்து திரிகின்றது. அவ்வாறு நெடுந்தொலைவு சென்றும் உணவுக் கிடைக்காமல் துன்பப்படுகின்றது.

**மனையுரை புறவின் செங்காற் சேவ**
**லின்புறு பெடையொடே மன்றுதேர்ந் துண்ணா**
**மதலைப் பள்ளி மாறுவன விடுப்பக்**

- (நெடுநல்.45-47)

என்ற அடிகளில் ஆண்புறா தம் இணையோடு இணையாமலும் இரைதேடி உண்ணாமலும் இரவு பகல் தெரியாமலும் குளிரால் கால் கடுப்பதால் காலை மாற்றி அமர்ந்திருந்தன. இயற்கையாக ஏற்படும் குளிர் புறாவிற்குத் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

**முடிவுரை**

புறாக்கள் துணையை பிரியாமல் வாழும் பறவை அப்பறவையைக் காணும் பொழுது மக்கள்மனதில்காதல்உணர்வு இழையோடுகின்றது. புறாக்கள் தங்கள் இணையை இன்ப உணர்விற்கு இசைவிக்க ஒலியெழுப்பி இசைக்கின்றன. புறாக்கள் முன்பு நடந்த நிகழ்வுகளை நினைவுக்கூறும் தன்மை கொண்டவை. தன்னைவிட வலிமையான உயிரினத்தையும் தன்னை உணவாக்கிக் கொள்ளும் உயிரினத்தையும் கண்டு அஞ்சுகின்றன. புறாக்கள் அடிப்படைத்தேவையான உணவு உறைவிடம் போன்றவை அமையாவிடத்து துன்பப்படுகின்றன. வீட்டில் வாழும் புறாக்கள் உணவிற்காக துன்பப்படுவதில்லை. வனங்களில் சுதந்திரமாக வாழும் புறாக்கள் உணவிற்காக துன்பப்படுகின்றன.

**சான்றெண் விளக்கம்**


1. நற்றிணை.71:(7-9)
2. மேலது - 314: 9-12
3. ஆத்மா.கே.ரவி.பறவை விலங்களின் நடத்தைகள், ப.46.
4. ஆல்ஃபிரட் மோகன்தாஸ், விலங்குளின் சமுதாய வாழ்க்கை, ப.157.
5. ஐங்.425: 1-4.
6. ஸலீம் அலி, தமிழாக்கம் பேரா. இராசேந்திரன் எம்.பி, பறவை உலகம், ப.68.
7. பதிற்.39:10-13.